22nd February 1961]

Sri S. M. ANNAMALAI : ஸார், இப்போது இருக்கின்ற வரிகளை தாங்க முடியாத அளவுக்கு மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது மேலும் தண்ணீர் வரியை உயர்த்தினால் சாதாரண விவசாயிகள் இன்னும் பாதிக்கப்பட மாட்டார்களா? ஆகையால் இதை கைவிடுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : மத்திய அரசாங்கத்தினுடைய தகவலிலிருந்து புதிய பிராஜக்ட்டுகளிலுள்ளவைகளுக்கும், பழைய பிராஜக்ட்டுகளிலுள்ளவைகளுக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே இதைப் பற்றி பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும்.

Mr. SPEAKER : Questions are over.

[Note—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE NEED FOR RELIEF TO HARIJANS IN SIRKALI.

Mr. SPEAKER : I have received a notice from Sri C. Muthiah under rule 41 of the Assembly Rules. The hon. Member will now call the attention of the Minister.

Sri C. MUTHIAH : கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற ஐப்பசி மாதம் பூராவும் சீர்காழி தாலுகாவில் 62 அங்குலம் மழை பெய்ததின் காரணமாக பல வீடுகள் சேதம் அடைந்து விட்டன. சீர்காழி தாலுகாவினுடைய. . . .

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் போன வாரம் சட்ட சபைக்கு வரவில்லை போல் இருக்கிறது. 41-வது விதியின்கீழ் கனம் அங்கத்தினர் பிரசங்கம் செய்ய முடியாது. கொடுத்திருக்கக்கூடிய நோட்டீஸைப் படிக்க வேண்டியது. அதைப் படித்தவுடன் கனம் அமைச்சர் பதில் கொடுப்பார்.

III. SITTINGS OF THE HOUSE.

Sri M. KALYANASUNDARAM : Rule 20 of the Madras Legislative Assembly Rules reads as follows :—

"20. Sittings of the Assembly shall, unless the Speaker otherwise directs, ordinarily commence at 8–30 a.m. and conclude at 1-30 p.m.".

To-day the Assembly could not meet at 8–30 a.m. and the commencement of the meeting was delayed by ten minutes. The Hon. Speaker did not direct that the Assembly should meet only at 8–45 a.m. The reason was there was no quarum. The Hon. the Leader of the House did not take efforts to secure quorum at 8-30 a.m. In this connection I wish to bring to your notice . .